**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–7

O.S.No.396/2015

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. காளிதாஸ் | வயது: 52 |
| த/பெ. : திரு. ஜெகநாதன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

1. வாதிகள் ஆஜர். 4 ,5 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி, 4,5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் கடந்த 1.12.2023 ம் தேதியில் இருந்து பெருந்தொளுவு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் உள்ளேன். சாட்சி சம்மனில் திருப்பூர் வருவாய் கோட்டாச்சியர் விசாரணையின் போது பெருந்தொளுவு கிராமம் சர்வே எண். 386/1, 385 இ சொத்துக்களை பொறுத்து நடந்த விசாரணையின் போது கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கை வரைபடத்துடன் உள்ள ஆவணங்களை முன்னிலை படுத்தி சாட்சியம் அளிக்கும்படி சொல்லப்பட்டுள்ளது.

2. ஆனால் அந்த அறிக்கை எங்களுடைய அலுவலக கோப்பில் இல்லாததால் நான் தனிப்பட்ட முறையில் எங்களுடைய வருவாய் கோட்டாச்சியரிடம் 24.10.2025 தேதி மனு கொடுத்து அந்த மனுவின் படி வருவாய் கோட்டாச்சியர் கடித குறிப்புடன் 03.11.2022 ம் தேதி பெருந்தொளுவு கிராம நிர்வாக அலுவலர் வருவாய் கோட்டாச்சியர் விசாரணையின் போது கொடுத்த வாக்குமூலத்தின் நகல் இணைப்பட்டு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. அதை தாக்கல் செய்கிறேன்.

3. சாட்சி சம்மன் பெறப்பட்டபிறகு தாவா சொத்தை நேரில் போய் பார்த்தேன். சர்வே எண். 385/3 இ 2.30 ஏக்கர் மற்றும் 386/1 3.8 ஏக்கர் சொத்தில் மணிவண்ணன், உஷா அனுபவம் செய்து வருகிறார்கள் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். தாவா

சொத்தை நேரில் சென்று பார்வையிட்டபோது அந்த சொத்தில் தென்னை தோப்பு, சோள பயிர், நாய்கள், ஆடு மற்றும் மாடுகள் 5,6 இருந்தது.

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கிராம நிர்வாக அலுவலர் முருகேசன் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை பெருந்தொளுவு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்தார் என்றால் 30.11.2023 வரை இருந்தார். எப்போது அந்த கிராமத்திற்கு சேர்ந்தார் என்று தெரியாது. தற்போது எங்களுடைய வருவாய் கோட்டாச்சியரிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலம் எந்த நா.க.எண்ணிற்குரியது என்றால் க.மு. 4868/2022/R4. அந்த மனு எதற்காக யாரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியுமா என்றால் தெரியாது.

2. பட்டா மாறுதல் ஒரு சொத்திற்கு செய்யவேண்டும் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் மனு கொடுக்கவேண்டும் என்றால் மனுதாரர் ஆன்லைனில் விண்ணப்பிக்கவேண்டும். வட்டாச்சியர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவேண்டும் என்றால் சரி. அந்த மனு சரிபார்ப்பதற்கு வருவாய் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும் என்றால் தவறு தேவையில்லை. நேரடியாக கிராம நிர்வாக அதிகாரிக்கு அந்த மனு விசாரணைக்கு அனுப்படும் என்றால் சரி. பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பு கிராம நிர்வாக அலுவலர் சம்மந்தப்பட்ட சொத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு யார் சுவாதீனத்தில் உள்ளார் என்று அறிக்கை கொடுப்பார் என்றால் சரி.

3. கிராம நிர்வாக அதிகாரி கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் வட்டாச்சியர் பட்டா மாறுதல் ஏற்படுத்துவார் என்றால் சரி. சர்வே எண். 385/3, 386/1 சொத்துக்களில் விசாரணையின் மூலம் பட்டா எப்போது மாற்றம் செய்யப்பட்டது என்றால் கடைசியாக வேல்முருகன் என்பவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எப்போது வேல்முருகன் பெயரில் மேலே சொன்ன சொத்துக்களுக்குரிய பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் 22.02.2019 ம் தேதி மாற்றம் செய்யப்பட்டது.

4. அதற்கு முன்பு மேலே சொன்ன சொத்துக்களில் பட்டா நாகவிஜய் என்பவர் பெயரில் இருந்தது என்றால் சரி. நா.கா.4868/2022 கோப்பின் படி சார்

ஆட்சியர் என்ன உத்தரவு ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது. அந்த விசாரணையில் நடைபெற்ற விவரங்கள் முழுவதும் தெரியுமா என்றால் தெரியாது. அந்த விசாரணையில் மணிவண்ணன், உஷா கோரிய பட்டா மாறுதல் உத்தரவு நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த உத்தரவு பாதகம் ஏற்பட்டுயிருந்தால் 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யப்படலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. மேல்முறையீடு நிலுவையில் இருப்பதை பொறுத்து எங்களுடைய அலுவலக கோப்புக்களில் தகவல் உள்ளதா என்றால் இல்லை.

5. கிராம நிர்வாக அலுவலர் ஆளுகைக்குள் வரும் சொத்துக்களுக்கு முறையான அடங்கல் கணக்குகள் சரியாக பராமரிக்கவேண்டும் என்றால் சரி. மேலே சொன்ன சர்வே எண்.385/3 இ, 386/1 சொத்துக்களுக்கு அடங்கல் கணக்குகளில் கிராம நிர்வாக அலுவலர் நேரில் சென்று பார்வையிட்டு சுவாதீனதாரர் பெயர்களை குறிப்பார்கள் என்றால் ஆமாம். என்ன பயிர் உள்ளதையும் குறிப்பிடவேண்டும் என்றால் ஆமாம்.

6. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அடங்கல் எந்த வருடம் யாரால் கொடுக்கப்பட்டது என்றால் பசலி 1429 குரிய அடங்கல் கணக்கை எனக்கு முன்பு இருந்த கிராம நிர்வாக அலுவலர் கொடுத்துள்ளார். அந்த அடங்களின் படி மேலே சொன்ன சொத்துக்களில் யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் வேல்முருகன் சுவாதீனத்தில் உள்ளார். நான் நேரில் சென்று பார்த்தபோது அந்த சொத்தில் மணிவண்ணன் சுவாதீனத்தில் இருந்தார் என்று சாட்சி தன்னிச்சையாக முன்வந்து கூறுகிறார்.(கற்றறிந்த 5ம் மபிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் என்னுடைய கேள்விக்கான பதில் மேலே சொன்ன பதில் இல்லை என்று அந்த சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்று கூறினார். இந்த சாட்சியத்தில் சாட்சியம் சட்டப்படி கருத்தில் கொள்ளமுடியுமான என்று தீர்ப்புரையின்போது முடிவுசெய்யும்).

7. அடங்கல் தேதி என்ன கூறிப்பிட்டுள்ளது என்றால் 7.9.2020. அன்றைய தேதியில் யார் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்பது எனக்கு நேரில் தெரியாது என்றால் சரி. எங்களுடைய அடங்கல் கணக்கின் படி வேல்முருகன் தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரி. பசலி 1429 7.9.2020 ம் தேதி அடங்கல் கணக்கு உண்மை நகல் பி.வா.சா.ஆ– 8. சாட்சியம் அளிப்பதற்காக பசலி 1434 க்குரிய அடங்கல் என்னிடம் உள்ளது என்றால் ஆமாம். அதில் சர்வே எண் குரிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 385/3 இ, 386/1 க்குரியது.

8. பசலி 1434 எந்த வருடத்திற்குரிய கணக்கு என்றால் 2024. அந்த அடங்கல் கணக்கின் படி மேலே சொன்ன சொத்துக்களில் சுவாதீன வேல்முருகன் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பசலி 1434 க்கு 27.10.2025 ம் தேதிய அடங்கல் கணக்கு சா.சா.ஆ– X14. இந்த சொத்துக்களை பொறுத்து வழக்கு நிலுவையில் உள்ளது தெரியுமா என்றால் சம்மன் வந்தபிறகு தெரியும். இந்த சொத்துக்களை பொறுத்து நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது.

9. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வருவாய் சார் ஆட்சியர் நா.கா.4868/2022/R2 கோப்பு விசாரணையின் உத்தரவுகள் என்றால் சரி. விசாரணைக்கு பிறகு வழக்கு உரிமையில் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. 14.10.2023 ம் தேதி சார் ஆட்சியர் செயல் முறை உத்தரவுகள் அசல் **பி.வா.சா.ஆ– 9**. அந்த உத்தரவில் வேல்முருகன் பெயரில் உள்ள பட்டா ரத்துசெய்யக்கூடாது என்று **பி.வா.சா.ஆ–** 9 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு உத்தரவு இல்லை. நீதிமன்ற உத்தரவுபடி நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

10. அந்த உத்தரவில் 30 நாட்களுக்கு மேல் மேல்முறையீடு செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. எங்களுடைய கோப்பின் படி மேல்முறையீடு உள்ளதா என்றால் தெரியாது. வாதிகள் சுவாதீனத்தில்

இருப்பதாக அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 2017 ம் வருடம் முதல் எங்கள் அடங்கல் கணக்கின்படி வேல்முருகன் தான் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்க்கவேண்டும். 2020 இருந்து 2025ம் வருடம் வரை ஆவணங்களின்படி வேல்முருகன் தான் சுவாதீனத்தில் உள்ளார் என்று அடங்கல் படி என்னால் சொல்லமுடியும் என்றால் சரி.

11. அதற்குமுன்பு நாகவிஜய் என்பவர் பெயரில் மேலே சொன்ன சொத்துக்களில் சிட்டா உள்ளது என்றால் சரி. அது எப்போது அவர் பெயரில் மாற்றப்பட்டது என்றால் தெரியாது. அடங்கள் கணக்கின் படி மேலே சொன்ன சொத்துக்களில் தென்னை பயிர் உள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்துக்களில் நாய்கள் வளர்க்கவேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்த சொத்துக்களுக்கு யார் உரிமையாளர் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது. தற்போது தாவா சொத்துக்களில் உரிமையாளர் என்ற அடிப்படையில் வேல்முருகன் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் அவர் சுவாதீனத்தில் இல்லை. 2002 ம் வருடத்தில் இருந்து வாதிகள் தாவா சொத்தை பொது அதிகார முகவர் மூலம் விற்பனை செய்துவிட்டதால் அவர்கள் சுவாதீனத்தில் இல்லை என்றால் தெரியாது.

12. வாதிகளுக்கு ஆதரவாக வருவாய் ஆவணங்கள் மற்றும் என்னுடைய மேல் அதிகாரியின் உத்தரவுகளுக்கு எதிராக முதல் விசாரணை சாட்சியம் உள்ளது என்றால் தெரியாது. கிராம நிர்வாக அலுவலகத்தில் பராமரிப்புகளும் ஆவணங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

4ம் பிரதிவாதி இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**நீதிமன்ற கேள்வி**

**<u>கேள்வி</u>**

1. சா.சா.ஆ–X14 யாரால் தயார் செய்யப்பட்டது?

**<u>பதில்</u>**

நான் தான் தயார் செய்தேன்.

**<u>கேள்வி</u>**

2. அவ்வாறு தயார் செய்தபோது அதில் குறிப்பிட்டுள்ள சொத்தை நேரில் சென்று பார்வையிட்டு அடங்கல் கணக்கு தயார் செய்தீர்களா?

**<u>பதில்</u>**

நேரில் சென்று சொத்துக்களை பார்வையிட்டேன்.

**<u>கேள்வி</u>**

3.அவ்வாறு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டபோது யார் சுவாதீனத்தில் இருந்தாரர்களா அந்த நபர்களின் பெயர்களைதான் அடங்களில் குறிப்பிட்டுள்ளீர்களா?

**<u>பதில்</u>**

இல்லை.

**<u>கேள்வி</u>**

4. அப்படி என்றால் எதன் அடிப்படையில் அடங்கலில் சுவாதீனதாரர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது?

**<u>பதில்</u>**

சிட்டாவை வைத்து அவ்வாறு அடங்கல் தயாரித்தேன்.

**கேள்வி**

5. அப்படி என்றால் அந்த சொத்துகளுக்கு நேரில் சென்று பார்வையிடவில்லையா?

**<u>பதில்</u>**

நேரில் பார்வையிட்டேன்.

**<u>கேள்வி</u>**

6. அவ்வாறு பார்வையிட்டபோது அந்த சொத்தில் யார் சுவாதீனத்தில் இருந்தார்களோ அவர்கள் பெயர்களை தான் அடங்கல் கணக்கில் பயிர் விவரங்களுடன் குறிப்பிட்டீர்களா?

**பதில்**

நேரில் சென்று யார் சுவாதீனத்தில் இருந்தார்களோ அவர்கள் பெயரை தான் அடங்களில் குறிப்பிட்டு அடங்கல் தயார் செய்யப்பட்டுள்ளது. இன்னும் என்னுடைய மேல் அதிகாரிக்கு அதை அனுப்பவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.03 18:01:35 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.